**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் தவணைப் பரீட்சை, யூலை - 2019**

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, July - 2019**

FWC

| தரம் :- 12 (2020) | பொருளியல் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

## பகுதி – I

| | | | |
|---|---|---|---|
| 1) 2 | 6) 2 | 11) 3 | 16) 5 |
| 2) 3 | 7) 4 | 12) 2 | 17) 4 |
| 3) 4 | 8) 1 | 13) 2 | 18) 1 |
| 4) 1 | 9) 3 | 14) 1 | 19) 3 |
| 5) 5 | 10) 5 | 15) 4 | 20) 5 |

## பகுதி – II

*01. 1)*

- மாற்றுத் தீர்மானங்களிடையே மிகச்சிறந்ததை தெரிவு செய்வதன் பொருட்டு இழக்கப்பட்ட அடுத்த சிறந்த தீர்மானத்தின் மெய்ப்பெறுமதி அமையச் செலவாகும். (2 புள்ளிகள்)
- வளஅருமை (1 புள்ளி)
- வளமாற்றுபயோகம் (1 புள்ளி)

agaram.lk

*2)*

- விலைப்பொறிமுறை – சந்தைப்பொருளாதாரம்
- கட்டளைப்பொறிமுறை – கட்டளைப் பொருளாதாரம்
- விலைப்பொறிமுறை மற்றும் கட்டளைப்பொறிமுறை – கலப்பு பொருளாதாரம்
- பாரம்பரிய நடைமுறைகள் — மரபுசார் பொருளாதாரம்

(ஒன்று வீதம் 4 புள்ளிகள்)
(முதலாளித்துவம், சோசலிசம் என்ற வகைப்படுத்துக்கு புள்ளிகள் இல்லை)

*3)*


- குறைந்தளவான உள்ளீடுகளில் மிக அதிகளவான வெளியீடுகள் பெறப்படும் நிலை உற்பத்தியில் வினைத்திறன் ஆகும். (1 புள்ளி)
  நிபந்தனைகள்
  - நிறைதொழில்மட்டம், நிறை உற்பத்தி

  (1 புள்ளி)

- சமூகத்தேவை மற்றும் விருப்பங்களுக்கு பொருத்தமான வகையில் வளங்களை ஒதுக்கீடு செய்தல் வள ஒதுக்கீட்டில் வினைத்திறன் ஆகும்.
  நிபந்தனை
  எல்லைச்செலவுகள் விலைக்கு சமப்படுத்தல்


  (1 புள்ளி)

4) அ) வெளிநாட்டு முதலீடுகளின் வருகை அதிகரித்தல்.





(1 புள்ளி)

ஆ) விளைதிறன் உயர்வடைதல்.




(1 புள்ளி)


இ) விவசாய நிலங்கள் துண்டாடப்படுதல்.




(1 புள்ளி)

agaram.lk

ஈ) உள்ளீடுகளில் இருந்து உச்ச வெளியீடு பெறப்படுதல்.




(1 புள்ளி)

5)

- வளங்கள் மாற்றுபயோகத்தில் பூரணபதிலீட்டை கொண்டதாக அமையாமை.
- ஒரு உற்பத்தியை அதிகரிக்கும்போது ஆரம்பத்தில் பொருத்தப்பாடான வளங்களும் பின்னர் பொருத்தப்பாடு குறைந்த வளங்களும் பயன்படுத்தப்படுதல்.
- உற்பத்திகளிடையே தொழிநுட்பம் வேறுபடுதல்.

(யாதாயினும் இரண்டிற்கு 4 புள்ளிகள்)

02.

1) அ) பண்டமொன்றினது கேள்வியை தீர்மானிக்கும் காரணிகளில் குறித்த பொருளின் விலை தவிர்ந்த மற்றையவை மாறாதபோது குறித்த பொருளின் விலை மாற்றத்தினால் நுகர்வோன் மெய்வருமானம் மாற்றம் அடைந்து கேள்வித்தொகை மாற்றமடைதல் வருமான விளைவு ஆகும்.

(2 புள்ளிகள்)

- குறித்த பொருளின் விலை தவிர்ந்த ஏனையன மாறாமலிருக்க குறித்த பொருளினது விலை மாற்றமடைவதால் பதிலீடுகளின் கேள்வி மாற்றமடைந்து பண்டத்தினது கேள்வித்தொகையில் ஏற்படும் மாற்றம் பதிலீட்டு விளைவு ஆகும்.

(2 புள்ளிகள்)

ஆ) சாதாரண பண்டத்திற்கான வருமானவிளைவு எதிர்க்கணியம் (1 புள்ளி)
பதிலீட்டு விளைவு எதிர்க்கணியம். (1 புள்ளி)

2)

- உற்பத்தி தொழினுட்பத்தின் பொருத்தமற்றதன்மை
- உள்ளீடுகளிற்கான விலை உயர்தல்.
- உற்பத்தி மீதான வரி விதிப்பு.
- உற்பத்தியாளர் எண்ணிக்கை குறைதல்.
- போட்டி நிரம்பலின் விலை அதிகரித்தல்.

(3 இற்கு 3 புள்ளிகள்)

3)

- கேள்வித் தொகையும் நிரம்பல் தொகையும் சமம்.
- கேள்வி விலை நிரம்பல் விலைக்கு சமனாகக் காணப்படுதல்.
- உயர்ந்த பட்ச கேள்வித் தொகையைக் காட்டிலும் குறைந்தபட்சம் நிரம்பல் தொகை குறைவாகக் காணப்படல்.
- மிகைக்கேள்வி மற்றும் மிகை நிரம்பல் பூச்சியம்.

(3 இற்கு 3 புள்ளிகள்)

4) அ) $Qd = a - bp$

$Qd = a - \frac{\Delta d}{\Delta P}P$

$Qd = a - \frac{400}{40}P$

$Qd = a - 10P$

$500 = a - (10x10)$

$Q = 600$

$Qd = 600 - 10P$ (1 புள்ளி)

$QS = a + bp$

$QS = a + \frac{400}{40}P$

$QS = a + 10P$

$100 = a + (10 \times 10)$

$Q = a$

ஆ) $QS = Qd$


$10P = 600 - 10P$

$P = 30/-$ (1 புள்ளி)

$QS = 10x30$

$= 300$ அலகுகள் (1 புள்ளி

இ)




(2 புள்ளிகள்)

agaram.lk

ஈ) $Ped = b \times \frac{P}{Qd}$

$= -10 \times \frac{30}{300}$

$= -1$ (1 புள்ளி)

$Pes = b \times \frac{P}{QS}$

$= 10 \times \frac{30}{300}$

$= 1$ (1 புள்ளி)

03. 1)

- உற்பத்தியாளருக்கான சுமைகுறைந்து நிரம்பல் அதிகரிக்கும்.
- சந்தை விலை குறைவடைந்து சந்தைத்தொகை அதிகரிக்கும்.
- நுகர்வோன் மிகை உற்பத்தியாளன் மிகை என்பன அதிகரிக்கும்.
- அரச செலவினத்தில் அதிகரிப்பு ஏற்படும்.
- சமூக இழப்புக்கள் உருவாதல்.

(4 இற்கு 4 புள்ளிகள்)

2) பண்டமொன்றிற்கான சமநிலை விலை நுகர்வோரது நலனை பாதிப்பதாக அமையும் போது நுகர்வோர் நலன்கருதி அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் சட்டரீதியான ஒரு விலைக்கட்டுப்பாடு உயர்ந்த பட்ச விலைக்கட்டுப்பாடு ஆகும்.

(2 புள்ளிகள்)

உ+ம் :- அத்தியாவசியப்பண்டங்களிற்கு நிர்ணயிக்கப்படும் ஆகக்கூடிய விலை.

(1 புள்ளி)

3) அ) வரிக்கு முன்

$QS = Qd$

$-30 + 6P = 160 - 4P$

$10P = 190$

$P = 19/-$

$Qd = 160 - (4 \times 19)$

$= 84$ அலகுகள் (1 புள்ளி)

வரிக்குப்பின்

$QS = -30 + 6(P - 10)$

$QS_1 = -90 + 6P$

$-90 + 6P = 160 - 4P$

$10P = 250$

$P = 25/-$

$Q = 160 - (4 \times 25)$

$= 60$ அலகுகள்

(1 புள்ளி)

சந்தைவிலை 6 ரூபாவால் அதிகரிக்கும்.
சந்தைத்தொகை 24 அலகுகள் வீழ்ச்சியடையும்.

(2 புள்ளிகள்)

ஆ) வரிக்கு முன் $CS = \frac{(40-19)\times 84}{2}$

$= 882/-$

வரிக்குப்பின் $CS = \frac{(40-25)60}{2}$

$= 450/-$

$CS$ இல் ஏற்பட்ட வீழ்ச்சி $= 432/-$ (3 புள்ளிகள்)

agaram.lk

இ) வரிக்கு முன் $PS = \frac{(19-5)84}{2}$
$= 588/-$

வரிக்குப்பின் $PS = \frac{(15-5)60}{2}$
$= 300/-$
PS வீழ்ச்சி $= 288/-$ (3 புள்ளிகள்)

ஈ) வரிக்கு மீள முடியா இழப்பு
$= (432 + 288) - (10 \times 60)$
$= 720 - 600$
$= 120/-$
(3 புள்ளிகள்)

04.
1)
- தரப்பட்ட நிலையான உள்ளீடுகளுடன் மாறும் காரணியிலேற்பட்ட மாற்றத்துக்கும் வெளியீட்டு மாற்றத்துக்குமிடையிலான தொழிநுட்ப ரீதியிலான தொடர்பினை விளக்குதல். குறுங்கால உற்பத்தி தொழிற்பாடு ஆகும்.

(1 புள்ளி)

$Q = f(K, L_1, L_2, L_3, \dots L_n)$

(1 புள்ளி)
- நீண்டகால உற்பத்தியில் எல்லா உள்ளீடுகளிற்கும் வெளியீடுகளிற்கும் இடையிலான தொழில்நுட்ப ரீதியிலான தொடர்பினை விளக்குவது நீண்டகால உற்பத்தி தொழிற்பாடு ஆகும்.

(1 புள்ளி)

$Q = f(K, L)$

(1 புள்ளி)

2)
- நீண்டகால உற்பத்தி செயன்முறையில் பயன்படுத்தப்படும் எல்லா உள்ளீடுகளிலும் ஏற்பட்ட மாற்ற வீதத்திற்கும் அதனால் வெளியீடுகளில் ஏற்பட்ட மாற்ற வீதத்திற்கும் இடையிலான விகிதாசாரத்தை விளக்குவது அளவுத்திட்ட விளைவு ஆகும். இது அதிகரிக்கும் அளவுத்திட்ட விளைவு, மாறா அளவுத்திட்ட விளைவு மற்றும் குறையும் அளவுத்திட்ட விளைவு என்பனவற்றை உள்ளடக்கியது.

(2 புள்ளிகள்)
- நீண்டகால உற்பத்தியில் வெளியீடுகளை விரிவாக்கும் போது நீண்டகால சராசரிச்செலவு வீழ்ச்சியடைவது அளவுத்திட்டச்சிக்கனம் ஆகும். அதிகரிக்கும் அளவுத்திட்ட விளைவுகள் உள்ள நிலையில் அளவுத்திட்ட சிக்கனம் காணப்படும்.

(2 புள்ளிகள்)

3)
- குறுங்கால உற்பத்தி செயன்முறையில் ஈடுபடுத்தப்படும் நிலையான உள்ளீடுகளின் பொருட்டு ஏற்பட்ட செலவுகள் நிலையான செலவுகள் ஆகும்.

(1 புள்ளி)
- உ+ம் :- ஒப்பந்த அடிப்படையில் இணைக்கப்பட்ட ஊழியர் கொடுப்பனவு.

(1 புள்ளி)
- குறுங்கால உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட மாறும் உள்ளீடுகளின் பொருட்டு ஏற்பட்ட செலவுகள் மாறும் செலவுகள் ஆகும்.

(1 புள்ளி)

உ+ம் :- ஊழியருக்கான சம்பளங்கள்

(1 புள்ளி)

agaram.lk

*4)*

- நிறைபோட்டித்தொழிலில் உள்ள நிறுவனம் ஒன்று விலை ஏற்போனாக காணப்படுகின்றது.
- விலை ஏற்போனாக தொழிற்படும் நிறுவனத்தின் கேள்விக்கோடு முடிவிலி நெகிழ்ச்சியுடையதாகும்.
- இத்தகைய நிறுவனத்தின் எல்லா வெளியீட்டு மட்டங்களுக்குமான விலை ஒரே அளவில் காணப்படும்.
- இதனால் நிறுவனத்தின் எல்லை வருமானமும் எல்லா வெளியீட்டு மட்டங்களிலும் ஒரே அளவினதாக அமைகின்றது.

(4 புள்ளிகள்)

| Q | P | TR | MR |
|---|---|---|---|
| 1 | 20 | 20 | 20 |
| 2 | 20 | 40 | 20 |
| 3 | 20 | 60 | 20 |
| 4 | 20 | 80 | 20 |

(அட்டவணை கட்டாயமல்ல)

*5)*

- தொழிலில் ஒரு சில நிறுவனங்கள் முதன்மை பெற்றிருந்தால்.
- ஓரினத்தன்மையான அல்லது வேறுபடுத்தப்பட்ட பொருட்கள் காணப்படுதல்.
- நிறுவனங்கள் பரஸ்பரம் ஒன்றிலொன்று தங்கியிருத்தல்.
- பிரவேசத்தடை
- ஒப்பந்தங்கள் உடன்படிக்கைகள் இடம் பெறுதல்.

(4 இற்கு 4 புள்ளிகள்)

*05.*

*1)*

- பொருளாதார உற்பத்தி செயற்பாடுகளையும் பொருளாதாரமல்லாத உற்பத்தி செயற்பாடுகளையும் வேறுபடுத்துவதே உற்பத்தி எல்லை ஆகும்.

(1 புள்ளி)

உற்பத்தி உல்லைக்குள் உட்பட்ட விடயங்கள்

- சந்தையில் விற்பனையாகும் எல்லாப் பொருட்களும் சேவைகளும்.
- இறுதி நுகர்வுக்காக அல்லது மூலதன திரட்டலுக்காக உற்பத்தி செய்து உற்பத்தியாளர் தமக்காக வைத்துள்ள எல்லாப்பொருட்களும்.
- தாம் குடியிருக்கும் வீடுகளினால் பெறப்படும் வதிவிட சேவைகள்.
- சம்பளம் பெறும் ஊழியர்களால் மேற்கொள்ளப்படும் வீட்டு வேலைகளும் தனிப்பட்ட சேவைகளும்.
- வீட்டுப்பொருட்கள் செய்தல், பின்னல் வேலை, ஆடை தைத்தல், துணிநெய்தல் போன்றன.

(4 இற்கு 4 புள்ளிகள்)

*2)*

- மறைவான பொருளாதார நடவடிக்கைகள்
- சட்டரீதியாக பொருளாதார நடவடிக்கைகள்

(2 புள்ளிகள்)

- சட்டரீதியாக மேற்கொள்ளக்கூடியதான பொருளாதார நேர நடவடிக்கையாக இருந்த போதும் முறையான கணக்கீட்டில் உள்ளடங்காத பொருளாதார செயற்பாடுகள் மறைவாக இடம்பெறும் பொருளாதார நடவடிக்கைகள் ஆகும்.

(1 புள்ளி)

- சட்டத்தால் தடைசெய்யப்பட்ட பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்தலும் விநியோகித்தலும், சட்ட ரீதியான பொருட்கள் சேவைகளை அதற்கான சட்ட ரீதியான அனுமதி பெறாதவர்கள் உற்பத்தி செய்தலும் விநியோகித்தலும் என்ற இரு வடிவங்களையும் கொண்டதே சட்டரீதியற்ற நடவடிக்கைகள் ஆகும்.

(2 புள்ளிகள்)

agaram.lk

3)

- தேசிய கணக்கில் பயனற்ற சந்தைக்கொடுக்கல் வாங்கல்கள் (இடைநிலை உள்ளீடு)
- மாற்றங்கள்
- நிதி ரீதியான பத்திரங்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கள்.
- பாவிக்கப்பட்ட பொருட்களது கொள்வனவு மற்றும் விற்பனை.

(4 புள்ளிகள்)

4) அ) GVA $= 60 + 140 + 30 + 40 + 20$

$= 290$ பில்லியன்

(2 புள்ளிகள்)

ஆ) GDP $= 290 + 10$

$= 300$ பில்லியன்

(2 புள்ளிகள்)

இ) GNI $= 300 + (-20)$

$= 280$ பில்லியன்

(2 புள்ளிகள்)

06.

1)


- பொருளாதாரம் ஒன்றின் மொத்த வெளியீட்டு மட்டம் மற்றும் மொத்தக்கேள்வி என்பன தளம்பலற்று காணப்படும் நிலை பேரினப் பொருளாதார சமநிலை ஆகும்.
- எளிய பொருளாதாரம் ஒன்றினது சமநிலையின் போது

$Y = C + I$ அல்லது

$S = I$

என்ற நிலைகள் காணப்படும்.

(3 புள்ளிகள்)




(வரைபடம் 2 புள்ளி)

2)

- தன்னிச்சையான முதலீட்டு மாற்றத்திற்கும் அதனால் வருமானத்தில் ஏற்பட்ட மாற்றத்திற்கும் இடையிலான விகிதம் முதலீட்டுப் பெருக்கி ஆகும்.

(2 புள்ளிகள்)

- முதலீட்டுப்பெருக்கி எல்லை சேமிப்பு நாட்டத்தின் தலைகீழ் பெறுமதி ஆகும்.

$$KI = \frac{1}{MPS}$$


- எனவே முதலீட்டுப்பெருக்கி எல்லை நுகர்வு நாட்டத்துடன் நேரான பெறுமதியை கொண்டதாக அமையும்.

(1 புள்ளி)

*3)*

- பொருளாதாரமொன்றினது அரசகொள்வனவுகள் அதிகரிக்கும் போது மொத்தக்கேள்வியில் அதிகரிப்பு ஏற்பட்டு சமநிலை வருமானம் சமநிலை வருமானம் அதிகரிக்கும்.

*(2 புள்ளிகள்)*




*(2 புள்ளிகள்)*

4) அ) தன்னிச்சையான செலவுகள் $= 400 + 200 + 180$

$= 780$ பில்லியன்கள்

*(2 புள்ளிகள்)*

ஆ) $= C + I + G$

$= 400 + 0.8yd + 200 + 180$ *(1 புள்ளி)*

$= 780 + 0.8(Y - 100)$

$= 780 + 0.8Y - 80$

$0.2Y = 700$

$Y = \frac{700}{0.2}$

$= 3500$ பில்லியன்

*(2 புள்ளிகள்)*

இ) $KI = \frac{-b}{1-b}$

$= \frac{-0.8}{1-0.8}$

$= -4$ மடங்கு

$\Delta T = \frac{\Delta Y}{KT}$

$\Delta T = \frac{100}{-4}$

$= -25$

*வரியினை 25 பில்லியனால் குறைப்பதன் மூலம் வருமானமட்டத்தை மேலும் 100 பில்லியனால் அதிகரிக்கமுடியும்.*

*(2 புள்ளிகள்)*

agaram.lk